# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்
## இரண்டாந் தவணைப்பரீட்சை – 2018

**புவியியல் I, II**

சுட்டெண் : ...................... தரம் – 10 நேரம் : – மூன்று மணித்தியாலம்

- இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.

**பகுதி I**

- **1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை அடைப்புக் குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

01. வளிமண்டலத்தின் மொத்த வளி உள்ளடக்கத்தின் 50% புவிமேற்பரப்பிலிருந்து .................. கிலோமீற்றர் வரை உள்ள பகுதியிலேயே பரந்துகாணப்படும்.
(10 - 16, 5 - 6 , 16 - 26)

02. வளிமண்டலத்தின் மிகத்தாழ்ந்த வெப்பநிலை ..................... மண்டலத்திலேயே நிலவுகின்றது.
(இடை, மாறன், படை)

03. கண்ட ஓடு அதிகளவு கொண்டுள்ள மூலகம் ................. ஆகும்.
(மக்னீசியம் ,அலுமினியம் ,கந்தகம்)

04. சமுத்திரத்துடன் இணைவைக் கொண்ட கடல் ........................... ஆகும்.
(கஸ்பியன் கடல், சாக்கடல் ,சீனக்கடல்)

05. உலகின் காலநிலைப் பரம்பல் பற்றிய கருத்தினை முதன்முதலில் வெளியிட்டவர் ........................ ஆவார். (மில்லர், அரிஸ்ரோட்டில், கெப்பன்)

06. இத்தாலியின் ................. வடிநிலம் நெற்செய்கை இடம்பெறுகின்ற முக்கிய இடமாகும்.
(நைல் ,போ, மிசிசிப்பி)

07. உலக இயற்கை இறப்பரின் மொத்தஉற்பத்தியில் 95% ................................ நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றது.
(தெற்கு தென்கிழக்காசியா, மேற்கு ஐரோப்பா, கிழக்காசியா)

08. இலங்கையின் சேதன உர மத்தியநிலையம் ..........................மாவட்டத்தில் அமைந்துள்ளது.
(குருநாகல், மாத்தளை, அனுராதபுரம்)

09. ஜப்பானில் இரும்புருக்கு மையங்களில் முக்கியமானது....................... பிரதேசமாகும்.
(கோபே, தென்வேல்ஸ் ,சான்சிங்வான்)

10. இலங்கையின் இடவிளக்கப படத்தாள் ஒன்றினால் காட்டப்படும் பரப்பளவு.........................
(1000 சதுரசென்றிமீற்றர், 1000 சதுரகிலோமீற்றர், 10000 சதுர கிலோமீற்றர்)

- **11–15 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்துஅவைசரியாயின் "ச" இனையும் பிழையாயின் "பி" இனையும் சுற்றிவட்டமிடுக.**

11. உலகின் மிக உயர்ந்த இடத்தில் அமைந்துள்ள ஏரி தித்ததிக்கா ஆகும் (ச / பி)
12. புவியின் மொத்த நிலத்திணிவில் ஏறக்குறைய 1% புவியோடு கொண்டுள்ளது (ச / பி)
13. மலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள தட்டையான நிலம் மேட்டுநிலம் ஆகும். (ச / பி)
14. உலகில் பெரும்பாலான மக்களின் முக்கிய உணவு நெல் ஆகும். (ச / பி)
15. றைன் நதியானது ஏரியிலிருந்து உற்பத்தியாகிறது. . (ச / பி)

- **16 – 20 வரையான வினாக்களிற்கு 'அ' மற்றும் 'ஆ' என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கிடையிலான தொடர்புகளின் அடிப்படையில் பொருந்தும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதிகளின் இலக்கத்தினை அடைப்புக் குறியினுள் எழுதுக.**

16.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. மாறன் மண்டலம் | A. நீராவி, முகில், தூசு துணிக்கைகள் அற்றது |
| 2. படை மண்டலம் | B. வாயுக்கள் மிகக் குறைவு |
| 3. இடை மண்டலம் | C. வெப்ப நழுவு வீதம் செயற்படல் |
| | D. விண்கற்கள் எரிந்து அழிதல் |

1) CDA 2) CAD 3) BAC 4) DAB (……….……..)

17.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. மேல் மூடி | A. சிலிக்கன், மக்னீசியம் |
| 2. கண்ட ஓடு | B. நிக்கல், இரும்பு |
| 3. வெளி மையம் | C. சிலிக்கா, அலுமினியம் |
| | D. ஒலிவைன், சிலிக்கேற்று |

1) ACB 2) DCB 3) CBA 4) CAB (……………)

18.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. வட அமெரிக்கா | A. மன்சூரியன் சமவெளி |
| 2. தென் அமெரிக்கா | B. நுல்லபார் சமவெளி |
| 3. ஆசியா | C. பிறேசிலியன் மேட்டுநிலம் |
| | D. அப்பலாச்சியன் மலை |

1) CDB 2) ACD 3) CAB 4) DCA (……………)

19.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. அமுர் | A. கஸ்பியன் கடல் |
| 2. வொல்கா | B. பசுபிக் சமுத்திரம் |
| 3. டன்யூப் | C. வங்களாவிரிகுடா |
| | D. கருங்கடல் |

1) BAD 2) DAB 3) CBA 4) DCB (……………)

20. ‘அ’ ‘ஆ’

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| 1. புத்தளம் | A. அகலவத்தை |
| 2. அநுராதபுரம் | B. தலவாக்கலை |
| 3. களுத்துறை | C. லுணுவில |
| | D. மகா இலுப்பல்லம |

1) CDB 2) ADB 3) BDC 4) CDA (……………)

- **21 – 30 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களை பொருத்தமான சொற்களை உபயோகித்து பூரணப்படுத்துக.**

21. உயிர்க்கோளத்தின் நிலைப்புக்கு அவசியமான ஓசோன்படை ………………… மண்டலத்தில் அமைந்துள்ளது.
22. பௌதீகப் பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கி அமைக்கப்படும் படம் …………… ஆகும்.
23. உயரம் குறைந்தமிகவும் பரந்தபிரதேசத்திலே வியாபித்துக் காணப்படும் தட்டையான நிலம் ……………………… எனப்படும்.
24. $66\,{}^1/_2{}^\circ$ வட அகலக்கோடு ………………… எனப்படும்.
25. புவியின் பாரியளவான நிலவுருவங்களாக சமுத்திரங்களும் ……………………. காணப்படுகின்றது.
26. அதிக விளைச்சல் தரும் புதியகோதுமை இனமாகக் …………………. கொள்ளப்படுகின்றது.
27. கண்டமேடையின் விளிம்பில் இருந்து சமுத்திரத்தை நோக்கி சாய்வாக அமைந்துள்ள நிலப்பகுதி ……………………… என அழைக்கப்படும்.
28. தட்டையான நிலம், சேணாசம்மண் ஆகியன …………………… பயிர்ச்செய்கைக்குச் சாதகமான காரணிகளாகக் காணப்படுகின்றன.
29. நதி முகத்துவாரமும் ஏரிகளும் ……………… மீன்பிடிக்கு பொருத்தமான இடமாகும்.
30. பருத்திப்புடவை உற்பத்தியில் முக்கியத்துவம் பெற்ற ஆபிரிக்கநாடு ……………… ஆகும்.

- **31 - 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையினை தெரிவுசெய்து அதனை குறித்து நிற்கும் இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

31. புவிமேற்பரப்பில் நன்னீரின் சதவீதம்
    1. 2.5% 2. 97.5% 3. 20% 4. 79% (……………)
32. பைக்கால் ஏரி காணப்படும் கண்டம்
    1. ஐரோப்பா 2. அவுஸ்ரேலியா 3. ஆசியா 4. ஆபிரிக்கா (…………)
33. மரமுந்திரி ஏற்றுமதிக் கிராமம் அமைந்துள்ள இடம்
    1. ராஜாங்கன 2. கட்டுகம்பொல 3. தம்பதெனிய 4. குருணாகல (…………)
34. அம்பேவல பாற்பண்ணை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள மாவட்டம்
    1. பொலன்னறுவை 2. நுவரெலியா 3. அனுராதபுரம் 4. பதுளை (………..…)

35. நெற் செய்கையில் தற்போது சேதன உரங்களின் பயன்பாட்டில் கூடியகவனம் செலுத்தும் முக்கியநாடு

1. இந்தியா 2. பாகிஸ்தான் 3. இலங்கை 4. சீனா (…………..…)

- **கீழே தரப்படும் தகவல்களைப் பயன்படுத்தி 36,37 வினாக்களிற்கான விடையைத் தெரிவுசெய்க.**

A - சுவட்டு எரிபொருள் தகனம்

B - நீரின் தரம்

C - உயிரினங்கள் பாதிப்பு

D - பூகோள வெப்ப அதிகரிப்பு

36. ஒரு காரணியில் ஏற்படும் வீழ்ச்சி இன்னொரு காரணியில் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதை குறித்துக் காட்டும் கூற்றுக்களைக் கொண்ட இரு எழுத்துக்களை உள்ளடக்கும் விடை

1. AB 2. BC 3. AD 4. AC (………...…)

37. ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பு இன்னொரு காரணியில் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதை குறித்துக்காட்டும் கூற்றுக்களைக் கொண்ட இரு எழுத்துக்களை உள்ளடக்கும் விடை

1. AD 2. BC 3. AC 4. AB (…………)

38. இலங்கையில் 1 : 50000 படங்களில் அளி அடைப்பில் செங்குத்தான மற்றும் கிடையான கோடுகள் வரையப்பட்டுள்ள நிறம்

1. கறுப்பு 2. சிவப்பு 3. மஞ்சள் 4. நீலம் (…………)

39. முழுமையான அம்புக்குறி ஒன்றுடன் குத்தாகக் காணப்படும் கோட்டினால் குறித்துக் காட்டப்படும் வடக்கு.

1. உண்மை வடக்கு 2. காந்தவடக்கு

3. அளியடைப்பு வடக்கு 4. புவியியல் வடக்கு (…………)

40. இலங்கையின் தனித்துவ பொருளாதார வலயம்

1. 12 கடல்மைல் 2. 24 கடல்மைல்

3. 200 கடல்மைல் 4. 50 கடல்மைல் (…………)

(40×1= 40 புள்ளிகள்)